# <u>OS.No.309/2024, Dated 04.11.2025</u>

The witness sworn under Oaths Act 1969 on this the 04th day of November 2025.

**வா.சா.1 – ஜெயந்தி க/பெ குருசாமி வரவழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி.**

தாவா சொத்தில் வேர்கடலை பயிர் செய்துள்ளோம். அவ்வாறு பயிர் செய்ததற்கு அடங்கல் கணக்கு தாக்கல் செய்துள்ளோமா என்றால் எனக்கு அது குறித்து சரியாக தெரியவில்லை. தாவா சொத்தின் மொத்த விஸ்தீரனம் 45 சென்ட் ஆகும். அந்த 45 சென்டில் சுமார் 8 மூட்டை விளைச்சல் கிடைக்கும். நாங்கள் வாங்கியதில் இருந்து பயிர் வைக்கிறோம். எந்த ஆண்டு வாங்கினோம் என்று எனக்கு சரியாக ஞாபகம் இல்லை. 1999 ஆம் ஆண்டு எனக்கு திருமணம் ஆனது. அதற்கு முன்பு 3 வருடங்களுக்கு முன்பு வரை தான் பயிர் வைத்தோம். அதன் பின்னிட்டு பயிர் வைக்கவில்லை. 1, 2 பிரதிவாதிகள் 3ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த விபரம் அதன் பின்னிட்டு 3 வருடங்கள் கழித்து தான் தெரியவந்ததது. எனது சகோதரி வாசுகி சாத்தமங்கலத்தில் தான் வசித்து வருகிறார் என்றால் சரிதான். 3ம் பிரதிவாதி கிரையம் வாங்கிய பின்னிட்டு அந்த இடத்தில் காம்பவுண்டு சுவர் போட்டு வீடு கட்டியுள்ளாரா என்றால் காம்பவுண்டு சுவர் தான் போட்டுள்ளார் வீடு கட்டவில்லை. எங்களது தாத்தா பாட்டியின் சமாதி அங்கு ஓரமாக உள்ளது. 1வது பிரதிவாதி எனது தாயார் மற்றும் 2வது பிரதிவாதி எனது சகோதரர் என்றால் சரிதான். வழக்குரையில் சொல்லப்பட்ட விபரங்களை வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு என்னிடம் படித்து காட்டினார்களா என்றால் படித்துக்காட்டினார்கள். எனது தாயாரும், சகோதரரும் வழக்கறிஞர் மூலமாக இவ்வழக்கில் ஆஜர் ஆகிறார்களா என்று எனக்கு தெரியவில்லை. அவர்களை கேட்டால் தான் தெரியும். இவ்வழக்கில் முதல் நிலை தீர்ப்பாணையும் இறுதி நிலை தீர்ப்பாணையும் 1, 2 பிரதிவாதிகள் மீது மட்டும் தான் கோரியுள்ளோமா என்றால் இல்லை. 3 பிரதிவாதிகள் மீதும் கோரியுள்ளோம். தாவா பரிகாரங்களில் 1,2 பிரதிவாதிகள் மீது மட்டும் தான் பரிகாரம் கோரியுள்ளதாக

குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் 3 நபர்கள் மீதும் கோரியுள்ளோம். நான் முன்பு சாட்சி சொன்ன பின்னிட்டு தற்போது தான் எட்டியான் கிரையம் வாங்கிய சொத்து என்றும் அது அவரது பூர்வீக சொத்து இல்லை என்று தெரியவந்தது. எட்டியான் யாரிடம் கிரையம் வாங்கினார் என்று எனக்கு தெரியாது. எட்டியான் கிரையம் வாங்கிய ஆவணத்தை நான் பார்த்ததில்லை. எந்த ஆண்டு கிரையம் வாங்கினார் என்று எனக்கு தெரியவில்லை. பொன்னுசாமிக்கு 1, 2 பிரதிவாதிகள் விற்ற பத்திரத்தை நான் வாங்கி பார்க்கவில்லை. எனது தாயார் சொன்னதை வைத்து தான் 3ம் பிரதிவாதி அவர்களையும் ஏமாற்றி கிரையம் வாங்கிவிட்டார் என்று எனக்கு தெரியவந்தது. 3ம் பிரதிவாதி ஏமாற்றி எழுதி வாங்கிவிட்டதாக 1,2 பிரதிவாதிகள் காவல் நிலையத்தில் புகார் ஏதாவது கொடுத்தார்களா என்றால் இல்லை. 1,2 பிரதிவாதிகள் 3ம் பிரதிவாதிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார்களா என்று ஞாபகம் இல்லை. 1,2 பிரதிவாதிகள் 3ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த கிரைய பத்திரம் செல்லாது என வழக்கு தாக்கல் செய்துள்ளார்களா என எனக்கு தெரியாது. எனது அம்மா வழி தாத்தாவின் பெயர் அய்யாவு என்றால் சரிதான். அவருடைய மகனின் பெயர் அண்ணாமலை என்றால் சரிதான். அண்ணாமலையும், எனது தாயாரும், எனது சகோதரரும் சேர்ந்து தான் 3ம் பிரதிவாதிக்கு கிரையம் செய்தார்கள் என்றால் எனக்கு அது தெரியாது. அண்ணாமலை மீது நாங்கள் இந்த வழக்கை தாக்கல் செய்யவில்லை. 2009 ஆம் ஆண்டில் இருந்து தற்போது வரை தாவா சொத்தை 3ம் பிரதிவாதி தான் அனுபவிக்கிறார் என்றால் சரிதான். எங்களை உள்ளே நுழைய அனுமதிக்க மறுக்கிறார். 3ம் பிரதிவாதி அரசு பணியில் இருந்து விருப்ப ஓய்வு பெற்று பின்பு அரசியலில் சேர்ந்து மக்களவை உறுப்பினராக 2 முறையும், மத்திய இணை அமைச்சராக ஒரு முறையும் இருந்தார் என்றால் சரிதான். 3ம் பிரதிவாதி நேர்மையாகவும் எளிமையாகவும் வாழக்கூடியவர் என்றாலும் அவருடைய ஓய்வுதியத்தில் தான் தற்சமயமும் வாழ்ந்து வருகிறார் என்றால் எனக்கு அந்த விபரங்கள் தெரியாது. கிரையம் ஏற்பட்டு 15 ஆண்டு ஆன பிறகு அந்த ஆவணம்

செல்லாது என்று கோரமுடியாது என்றால் சரியல்ல. தாவாவில் உரிய தரப்பினர்களை சேர்க்காததால் அந்த தோஷத்தால் இந்த வழக்கு பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தாவாவில் உரிய தரப்பினர்களுக்கு எதிராக பரிகாரங்கள் கோராததால் இவ்வழக்கு பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனவே இவ்வழக்கை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்.

SARANYA S
Digitally signed by SARANYA S
Date: 2025.11.04 17:22:20 +0530

சார்புநீதிபதி
வந்தவாசி

சாட்சியின் கையொப்பம்